**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-1
Case No. : **O.S. 138/2019**
Name : ராஜப்பா
Father's/Husband's Name : ரெத்தினவேல்
Village :
Taluk :

Date : 04/08/2022
Nationality : Indian
Religion :
Age :55

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் இவ்வழக்கில் வாதியாவேன். பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். 02/03/2001ம் தேதி வாதி தாவா சொத்தில் கூரை வீடு கட்டுவதற்கு ஆடுதுறை பேரூராட்சி அலுவலகத்தில் உரிமை கட்டணம் செலுத்தியதற்கான ரசீது அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள வீட்டு வரி ரசீதுகள் ( 14 எண்ணிக்கை) வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15/09/2004 ம் தேதியிட்ட மின் இணைப்பு பெறுவதற்கு வாதி செலுத்திய ரசீது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(மேற்படி ரசீதில் வாதியின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்பதால் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** வாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள மின்கட்டண ரசீதுகள் ( 14 எண்ணிக்கை) வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள்/விவசாயிகள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத்தின் கீழ் வாதிக்கு

வழஙகப்பட்டுள்ள உறுப்பினர் அடையாள அட்டை அசல் வா.சா.ஆ.5 ஆக குறியிடு செய்யபடுகிறது. வாதியின் உழவர் பாதுகாப்பு அட்டை அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.